FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூலை- 2017
## Term Examination, July - 2017

| தமிழ் | தரம் :- 12 (2018) | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**
**பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களிற்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி – I

1) **பின்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

(i). நினையாய் வாழி தோழி நனைகவுள்
அண்ணல் யானை அணிமுகம் பாய்ந்தென
மிகுவலி யிரும்புலிப் பகுவாயேற்றை
வெண்கோடு செம்மறுக் கொளீ இ விடர்முகைக்
கோடையொற்றிய கருங்கால் வேங்கை
வாடுபூஞ்சினையிற் கிடக்கும்
உயர் வரை நாடனொடு பெயருமாறே.

அ) இச் செய்யுட்பகுதியின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
ஆ) இச் செய்யுளில் கையாளப்பட்டுள்ள உள்ளுறை உவமத்தின் பொருத்தப்பாட்டினை விளக்குக.
இ) இச் செய்யுள் மூலம் விளங்கும் சங்ககால அகத்திணை இலக்கிய மரபுகளை எடுத்துக் காட்டுக.

(ii). செய்யிதட் டாமரை பழித்த சீறடித்
துய்யிதட் டுப்பவிழ் சுருதி வாயினா
ளையிதட் டாரினா னறையத் தீமுனர்
நொய்யிதட் டாதென நொந்து வாடினாள்.

அ) இச் செய்யுட் பகுதி இடம் சந்தர்ப்பத்தை விளக்குக.
ஆ) இப்பகுதியில் கையாளப்பட்டுள்ள உவமையணியினை விளக்குக.
இ) மரியாளின் சிறப்பு எடுத்துக் காட்டப்படுமாற்றை விளக்குக.

(20 புள்ளி)

The National e-Learning Portal for The General Education

**2) பின்வரும் வினாக்களுக்கு அவற்றின் கீழே தரப்பட்டுள்ள விடைகளுள் பொருத்தமானதைத் தெரிவு செய்க.**

1. நெடிற்றொடர்க் குற்றியலுகரமாக அமைவது.
   1. தெரியாது 2. புரியாது 3. யாது 4. விடியாது 5. முடியாது
2. புறச்சுட்டாக அமையும் சொல்.
   1. இவர்கள் 2. அவன் 3. இப்புவி 4. உலகம் 5. அவை
3. உடனிலை மெய்ம்மயக்கமாக அமைந்த சொல்
   1. கற்கண்டு 2. தண்ணீர் 3. அன்பு 4. மஞ்சள் 5. தெய்வம்
4. பனையோலை என்பது
   1. கெடுதல் விகாரம் 2. திரிதல் விகாரம் 3. தோன்றல் விகாரம்
   4. இயல்புப் புணர்ச்சி 5. அகப்புணர்ச்சி
5. பின்வருவனவற்றுள் காலப் பெயராக அமைவது.
   1. உலகம் 2. மரம் 3. யுகம் 4. அச்சம் 5. ஊர்
6. 'அவன் நல்லவன்' என்பது
   1. தெரிநிலை வினை 2. குறிப்பு வினை 3. ஏவல் வினை
   4. வியங்கோள் வினை 5. செய்வினை
7. மரத்திலிருந்து பழங்கள் பொலபொலவென விழுந்தன என்பதில் இடம் பெற்றுள்ள வேற்றுமைப் பொருள்.
   1. ஆக்கல் 2. அழித்தல் 3. நீங்கல் 4. அடைதல் 5. ஒத்தல்
8. காரண சிறப்புப் பெயராக அமைவது.
   1. பறவை 2. அணி 3. வளையல் 4. நாற்காலி 5. முள்ளி
9. கார்குழல் ஆடினாள் என்பது.
   1. பண்ணுபத் தொகை 2. வினைத்தொகை 3. உவமைத் தொகை
   4. வேற்றுமைத் தொகை 5. அன்மொழித் தொகை
10. இருபத்தைந்து, முப்பது, அறுபது ஆண்டுகளில் எடுக்கப்படும் விழாக்கள் முறையே,
    1. பொன் விழா, வெள்ளி விழா, மணி விழா
    2. வெள்ளி விழா, முத்து விழா, பொன்விழா
    3. மணி விழா, பொன் விழா, வெள்ளி விழா
    4. முத்து விழா, வெள்ளி விழா, மணி விழா
    5. வெள்ளி விழா, முத்து விழா, மணி விழா

**ஆ) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

1. செயப்பாட்டு வினையை உதாரணந் தந்து விளக்குக.
2. ஐகாரக் குறுக்கம் என்றால் என்ன? உதாரணந் தந்து விளக்குக.
3. இருபெயரொட்டுப் பண்புத் தொகைக்கு உதாரணந் தந்து விளக்குக.
4. பகுதி இரட்டித்துக் காலங் காட்டும் வினைச் சொற்களுக்கு இரு உதாரணங்கள் தருக.
5. இடைநிலை மெய்ம்மயக்கத்தின் இரு வகைகளையும் உதாரணந் தந்து விளக்குக.

(5x2=10 புள்ளிகள்)

3) **பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 300 – 350 சொற்களில் கட்டுரை எழுதுக.**

அ) இலக்கியமும் பண்பாடும்

ஆ) வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துதல்

இ) இலங்கையில் மும்மொழிச் சமூகமொன்றை உருவாக்குதல்

ஈ) புவி வெப்படைதல்

உ) கற்றது கைமண்ணளவு

(20 புள்ளிகள்)

## பகுதி – II "அ"

4) சொல்வன்மை அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளனவற்றை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

அ) அமைச்சருக்கு இன்றியமையாதவை.

ஆ) சொல்லினது இலக்கணம்

இ) சொல்ல வல்லாரது சிறப்பு

ஈ) சொல்லாற்றல் அற்றாரது இழிவு (20 புள்ளிகள்)

5) கைகேயி சூழ்வினைப் படலத்தில் கைகேயி இரு வரங்களைக் கேட்டது முதல் தசரதன் அவள் காலில் விழுந்தது வரையுள்ள பகுதியில்

அ) தசரதன் நிலை

ஆ) கைகேயி நிலை

இ) உவமையணிகளைக் கையாள்வதில் கம்பனிடத்துக் காணப்படும் ஆற்றல் என்பவற்றைத் தெளிவு படுத்துக. (20 புள்ளிகள்)

6) பின்வருவனற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ) பெரியாழ்வார் திருமொழியில் கண்ணனின் குறும்புகளும் செயற்கரிய செயல்களும்.

ஆ) 'சாப விமோசனம்' என்ற சிறுகதையில் கைகேயி மீது அகலிகை காட்டு பரிவு.

இ) 'வீண்மீன்களுக்குத் திரும்ப ஏகுதல்' என்ற கட்டுரையில் வேற்றுக்கிரக மனிதர்கள் பூமிக்கு வந்தமை தொடர்பாக கட்டுரை ஆசிரியர் முன்வைக்கும் சான்றுகள்.

ஈ) தேம்பாவணியில் வானதூதன் செய்தி கேட்டு சூசையும் மரியாளும் அடைந்த துயரம்.

(20 புள்ளிகள்)

## பகுதி – II 'ஆ'

7) அ) பதினெண் கீழ்க் கணக்கு நூல்களை அவை கூறும் பொருளுக்கேற்ப வகுத்துக் காட்டுக.

ஆ) சங்கமருவிய கால இலக்கியப் பண்புகளைத் துலக்குக.

இ) தமிழ் இலக்கிய வரலாற்றில் இளங்கோவடிகளின் பங்களிப்பினை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

8) அ) போர்த்துக்கேய, ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களை வகைப்படுத்துக.

ஆ) இக்காலத்தில் கத்தோலிக்க மதக் கருத்துக்களைப் பரப்புவதற்கு தமிழ் இலக்கிய வடிவங்கள் கையாளப்பட்டன. அலசுக.

(20 புள்ளிகள்)